## வளர்நிலை – 4

# என் நண்பர்கள்

நான் என் நண்பர்களைப்பற்றித் தற்பொழுது பேச இருக்கிறேன். அதற்குமுன் நேற்று ஆசிரியர், வகுப்பில் சொன்னதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நட்பைப்பற்றித் திருக்குறள் விரிவாய்க் கூறுகிறது என்றார், ஆசிரியர்.
நட்பை எவ்வாறு ஆராய்ந்து கொள்ள வேண்டும், நட்பின் பழமையை எப்படிப் போற்ற வேண்டும், தீய நட்பு எப்படிப்பட்டது என்று விளக்கினார், ஆசிரியர். கூடா நட்பு எது என்று திருக்குறள் கூறுகிறது என்றார், அவர்.

என் நண்பர்கள், நான் தவறு செய்தால் சுட்டிக்காட்டித் திருத்துவார்கள்; நல்லதைச் செய்தால் பாராட்டுவார்கள்.

'பழகப்பழகப் பாலும் புளிக்கும்' என்பது பழமொழி. ஆனால், என் நண்பன் கண்ணனோடு கொண்டுள்ள நட்பு, மேலும் மேலும் வளர்ந்துகொண்டிருக்கிறது. அவன் என் நண்பனாய் வாய்க்க என்ன தவம் செய்தேனோ என்று நான் எண்ணக்கூடிய அளவுக்கு உயர்ந்த பண்பாளன்.

அவன் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசமாட்டான், தோழமையோடு என்றும் பழகுவான். நல்ல நண்பர்களோடு மீண்டும் மீண்டும் பழகுவது, நல்ல நூல்களை மீண்டும் மீண்டும் படிப்பது போன்றது.

'**உடுக்கை இழந்தவன் கைபோல**' உதவுகின்ற நண்பர்கள் இருக்கிறார்கள்; அவர் நட்பை உறுதியாய்க் கொள்ள வேண்டும்.

நன்றி,

வணக்கம்.